ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஔ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2020), மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2020 ஜனவரி 9] [திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்]

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் என்பது தன்னாட்சி பெற்ற நிறுவனமாக இருந்தாலும், அரசின் நிதியினைப் பெற்றுதான் செயல்பட்டு வருகின்றது. அப்படி இருக்கின்ற சூழ்நிலையில், நீங்கள் கொண்டுவந்துள்ள தமிழ்நாடு சட்டம் 42/1989 திருத்தச் சட்டத்தின்படி அரசு வழங்குகின்ற நிதிப் பயன்பாட்டினை கண்காணிக்க, ஆய்வு செய்ய, விசாரணை செய்ய அரசினுடைய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். குறிப்பாக, கால்நடை பல்கலைக்கழகம் தன்னாட்சிபெற்ற அதிகாரத்தோடு இருப்பதால், சுயமாகச் செயல்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் துணைவேந்தர்கள், வேந்தர்கள் இவர்களெல்லாம் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு பணிகள் ஆராய்ச்சிகளுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் இன்றுவரை செயல்பட்டு வருகின்றன. இந்தத் திருத்தச் சட்டத்தால் வேந்தர் மற்றும் துணைவேந்தர் அதிகாரத்தினை பறிப்பதற்குவழிவகை செய்யும் என்பதோடு, இந்தத் திருத்தச் சட்டத்தில் கண்காணிக்க, ஆய்வு செய்ய, விசாரணை மேற்கொள்ள எந்த நிலையில் இருக்கின்ற அதிகாரிகளை நீங்கள் நியமிக்க உள்ளீர்கள்? அதேபோல விசாரணை செய்ய, ஆய்வு செய்ய, கண்காணிக்க அமைக்கவிருக்கின்ற இந்தத் திருத்தச் சட்டத்தின்படி பல்கலைக்கழகத்தினுடைய அதிகாரிகள் இதிலே இணைத்துக் கொள்ளப்படுவார்களா? அல்லது அப்படி இணைத்துக்கொள்ளாத சூழ்நிலையில், யார் மீதாவது புகார் என்று கூறி அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்தத் திருத்தச் சட்டம் வழிவகை செய்யும். இந்தியாவிலேயே முதன்முறையாக 1989 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தினை தமிழ்நாட்டில் தொடங்கி*

---

*@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

வைத்தார். அப்படி வரலாற்று சிறப்புமிக்க அந்த நிகழ்விற்கு, வேந்தர் மற்றும் துணை வேந்தர் அதிகாரத்தினை பறிப்பதாக உள்ள இந்தச் சட்டமுன்வடிவினை திரும்பப் பெற வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை, மாநில அரசினுடைய நிதியுதவி பெறுகின்ற பல்கலைக்கழகமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதேபோல இங்கே பேசிய உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, இந்தச் சட்டத்திருத்தத்தின் மூலமாகப் பல்வேறு சங்கடங்கள் ஏற்படும் என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரை, எங்களுடைய அரசும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில், இந்தியாவில் எந்த மாநிலத்திலும்இல்லாதவகையில்கால்நடைபல்கலைக்கழகத்திற்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, அதற்காக நிதியுதவியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாகக் கொடுத்து—அதேபோல் மேலைநாடுகளுக்குச் சென்று, இங்கிருக்கின்ற பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவியர்கள்கூட மேலைநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்கின்ற உயரிய நோக்கோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆகவே,ஒருசட்டத்திருத்தத்தைநாங்கள்கொண்டுவருகின்றோம் என்று சொன்னால், அதில் எந்த உள்நோக்கமும் கிடையாது என்பதை முதலில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்டது என்று சொன்னாலும்கூட இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கால்நடை பல்கலைக்கழகத்தின் மூலமாகப் பல்வேறு திட்டப் பணிகளை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்திற்குத் தேவையான அனைத்து நிதியுதவிகளையும் கொடுத்து, கட்டடங்கள் கட்டுவதாக

இருந்தாலும் சரி, ஆய்வகங்கள் கட்டுவதாக இருந்தாலும் சரி, இந்தியாவில் அல்ல, தெற்கு ஆசியாவிலேயே உலகத்தரம் வாய்ந்த கால்நடை பூங்காவை தலைவாசலில், சேலம் மாவட்டத்தில் அமைக்கவிருக்கிறார்கள் என்று சொன்னால், கால்நடை பல்கலைக்கழகமும், அந்தப் பல்கலைக்கழகத்தில், செயல்பாடுகளை, ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் உருவாக்கவிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பல்வேறு நோக்கங்களுக்காக அரசினுடைய நிதிகளை நேரடியாகப் பெற்று அந்த நிருவாகம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், இந்த அரசைப் பொறுத்தவரை, நேரடியாக இருந்து இன்னும் அதைச் செம்மைப்படுத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் அல்ல என்பதை மட்டும் இந்த வேளையில் சொல்லிக்கொண்டு, இந்த சட்டமுன்வடிவிற்கு நீங்கள் ஆதரவு தர வேண்டுமென்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப்